# ஆர்ஷ வித்யா குருகுலம்
# திருமந்திரம் – ஓர் அறிமுகம் வகுப்பு 3

## திருமூலதேவ நாயனார் அருளிச்செய்த திருமந்திரம்
## முதல் தந்திரம்

- 1. உபதேசம்
- 2. யாக்கை நிலையாமை
- 3. செல்வம் நிலையாமை
- 4. இளமை நிலையாமை
- 5. உயிர் நிலையாமை
- 6. கொல்லாமை
- 7. புலால் மறுத்தல்
- 8.பிறன் மனை நயவாமை
- 9. மகளிர் இழிவு
- 10.நல்குரவு
- 11. அன்புடைமை
- 12. அக்கினி காரியம்
- 13. அந்தண ரொழுக்கம்
- 14. அரசாட்சி முறை
- 15. வானச் சிறப்பு
- 16. தானச் சிறப்பு
- 17. அறஞ்செய்வான் திறம்
- 18. அறஞ்செயான் திறம்
- 19. அன்பு செய்வாரை அறியும் சிவன்.
- 20. கல்வி

உபதேசம்

1.பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்

பதியினைப் போற்பசு பாசம் அனாதி

பதியினைச் சென்றணு காப்பசு பாசம்

பதியணு கிற்பசு பாசம் நிலாவே. 3

2. தெளிவு குருவின் திருமேனி காண்டல்

தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்

தெளிவு குருவின் திருவார்த்தைகேட்டல்

தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே. 27

யாக்கை நிலையாமை

3.மண்ணொன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்

திண்ணென்று இருந்தது தீவினைச் சேர்ந்தது

விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணானாற்போல்

எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாறே. 1

செல்வம் நிலையாமை

4.தன்னது சாயை தனக்குத வாதுகண்டு

என்னது மாடென்று இருப்பர்கள் ஏழைகள்

உன்னுயிர் போம்உடல் ஒக்கப் பிறந்தது

கண்ணது காணொளி கண்டுகொ ளீரே. 3

இளமை நிலையாமை

5.கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே

விழக்கண்டும் தேறார் விழியிலா மாந்தர்

குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்

விழக்கண்டும் தேறார் வியனுல கோரே. 1

## உயிர் நிலையாமை

6.அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்
வெவ்விய னாகிப் பிறர் பொருள் வவ்வன்மின்
செவ்விய னாகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்விக்கொ டுண்மின் தலைப்பட்ட போதே. 10

## கொல்லாமை

7.பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்
நற்றார் நடுக்கற்ற தீபமும் சித்தமும்
உற்றாரும் ஆவி அமர் ந்திடம் உச் சியே. 1

## புலால் மறுத்தல்

8.பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே. 1

## பிறன் மனை நயவாமை

9.ஆத்தமனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளை காமுறும் காளையர்
காய்ச் ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச் சம் பழத்துக் கிடருற்றவாரே 1

## மகளிர் இழிவு

10.மனைபுகு வார் கள் மனைவியை நாடில்
சுனைபுகு நீர் போல் சுழித்துடன் வாங்கும்
கனவது போலக் கசிந்தெழும் இன்பம்
நனவது போலவும் நாடவொண் ணாதே. 2

## நல்குரவு

11.அறுத்தன ஆறினும் ஆனினம் மேவி
அறுத்தனர் ஐவரும் எண்ணிலி துன்பம்
ஒறுத்தன வல்வினை ஒன்றல்ல வாழ்வை
வெறுத்தனன் ஈசனை வேண்டிநின் றேனே. 5

## அன்புடைமை

12.அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர் ந்திருந் தாரே. 1